**தலைப்பு – 174 புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி மற்றும் 2 ஆம் பந்தியில் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 3 ஆம் பந்தியிலிருந்து ஒவ்வொரு தலைப்பிற்கும் உரித்தான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| **தலைப்பு** | **திணைக்களப் பெயர்** |
|---|---|
| 232 | சிறைச்சாலைகள் திணைக்களம் |
| 326 | சமூக அடிப்படையிலான சீர்திருத்தத் திணைக்களம் |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

மேற்குறித்த 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வியாபார முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை பின்வரும் திகதிகளில் அவ் அமைச்சின் செயலாளருக்கும் திணைக்களக் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் வழங்கப்பட்டிருந்தன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| **தலைப்பு** | **அமைச்சு / திணைக்களம்** | **முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை விநியோகிக்கப்பட்ட திகதி** |
|---|---|---|
| 174 | புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு | 2015 யூலை 30 |
| 232 | சிறைச்சாலைகள் திணைக்களம் | 2015 ஆகஸ்ட் 10 |
| 326 | சமூக அடிப்படையிலான சீர்திருத்தத் திணைக்களம் | 2015 யூலை 21 |

**1.2 கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வியாபார முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களுக்காக செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 6,853.10 மில்லியன் ஆனதுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 6,589.83 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சினதும் ஒவ்வொரு திணைக்களங்களினதும் தேறிய ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்பு ரூபா 8.52 மில்லியனிற்கும் ரூபா 216.29 மில்லியனிற்கும் இடையிலான வீச்சில் அதாவது தேறிய ஏற்பாட்டில் 1.11 சதவீதத்திலிருந்து 18.0 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 174 | 765.48 | 756.96 | 8.52 | 1.11 |
| 232 | 5,873.90 | 5,657.61 | 216.29 | 3.68 |
| 326 | 213.72 | 175.26 | 38.46 | 18.00 |
| கூட்டுத்தொகை | **6,853.10** | **6,589.83** | **263.27** | **3.84** |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களிற்கான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகளின் விபரம் பின்வருமாறாகும்.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 17401 | 4.0 | 3.4 | 1.2 | 1.9 | 12.0 | 8.5 |
| 23201 | 120.0 | 111.6 | 100.0 | 104.3 | 450.0 | 267.6 |
| 32601 | 9.0 | 8.9 | 3.5 | 4.3 | 40.0 | 19.1 |

### 2.2.2 வியாபார முற்பணக் கணக்குகள்

அமைச்சின் கீழுள்ள சிறைச்சாலைகள் திணைக்களத்தின் தொழில்நுட்ப மற்றும் கமநல நடவடிக்கைகளுக்காக வியாபார முற்பணக் கணக்கொன்று பேணப்பட்டிருந்தது.

**(அ) பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

வியாபார முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான மீதிகளும் பின்வருமாறாகும்.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 23202 | 75.0 | 74.8 | 125.0 | 131.4 | 65.0 | 38.1 |

**(ஆ) நிதி விளைவு**

வியாபார முற்பணக் கணக்கின் நிதிவிளைவு பின்வருமாறாகக் காணப்பட்டது.

| விடய இல. | முற்பணக் கணக்கின் நடவடிக்கைகள் | நிதி விளைவு 2014 இலாபம் கருதுகோள் கட்டணம் தவிர்ந்த | 2014 நட்டம் கருதுகோள் கட்டணத்துடன் | 2013 இலாபம் கருதுகோள் கட்டணம் தவிர்ந்த | 2013 நட்டம் கருதுகோள் கட்டணத்துடன் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 23202 | சிறைச்சாலைகள் தொழில்நுட்ப மற்றும் கமநல முற்பண நடவடிக்கைகள் | 49.9 | 10.4 | 38.0 | 5.5 |

## 2.3 கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சின் கீழுள்ள இரண்டு திணைக்களங்களின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதிகளின் கூட்டுத்தொகை ரூபா 29.2 மில்லியனாக நிலவியது. விபரம் பின்வருமாறாகும்.

| அமைச்சு/திணைக்களம் | கட்டுநிதிக் கணக்கு இல | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா மில்லியன் |
| சிறைச்சாலைகள் திணைக்களம் | 7002/0000/00/0078/0014/000 | 3.4 |
| மேற்படி | 7002/0000/00/0079/0014/000 | 10.4 |
| சமூக அடிப்படையிலான சீர்திருத்தத் திணைக்களம் | 7002/0000/00/0412/0014/000 | 15.4 |
| கூட்டுத்தொகை | | **29.2** |

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இரண்டு திணைக்களங்களுக்கு உரித்தான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 110.7 மில்லியன் ஆகும். விபரம் பின்வருமாறாகும்.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கு இல. | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| ----------------------------- | --------------------------- | ---------- |
| | | ரூபா |
| புனர்வாழ்வளிப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | 6000/0000/00/0015/0180/000 | 2.1 |
| சிறைச்சாலைகள் திணைக்களம் - | | |
| வைப்புப் பிணை | 6000/0000/00/0001/0016/000 | 1.0 |
| வைப்பு – கேள்வி | 6000/0000/00/0002/0017/000 | 3.5 |
| சிறைக்கைதிகள் நலன்புரி நிதியம் | 6000/0000/000/0006/0081/000 | 4.5 |
| சிறைக்கைதிகள் ஊதியம் மற்றும் சொந்தப் பணக் கணக்கு | 6000/0000/00/0006/0081/000 | 4.2 |
| நானாவித வைப்புக் கணக்கு | 6000/0000/00/0015/0112/000 | 95.2 |
| சமூக அடிப்படையிலான சீர்திருத்தத் திணைக்களம் | 6000/0000/00/0015/0180/000 | 0.2 |
| | | -------- |
| **கூட்டுத்தொகை** | | **110.7** |
| | | ===== |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை மற்றும் புத்தகங்களின் படி அமைச்சினதும் அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களினதும் ஒதுக்கீட்டுக் கணக்கு, வியாபார முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகளிற்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அம் முகாமைத்துவ அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் போதுமானதும் முக்கியமானதுமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் இருந்து 5 ஆம் பந்தி வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு 174 – புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு

## 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

அமைச்சினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் ஒரு பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (i) | பொருட் பதிவேட்டுப் புத்தகம் | நிதிப் பிரமாணம் 454(1) | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ii) | பொறுப்புகள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நட்டங்கள் இழப்புகள் பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை |

**3.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்**

அமைச்சிற்கு முன்னைய ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட ஒரு கணக்காய்வு ஐயவினாவிற்கு 2015 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அவ் ஐயவினாக்களுக்கு உரித்தான கணிப்பிடப்படக்கூடிய கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி ரூபா 1,295,069 தொகையாகக் காணப்பட்டது.

**3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 04 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 17,000,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 05 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததன் காரணமாக ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்புகள் அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டின் 29 சதவீதத்திலிருந்து 87 சதவீதம் வரையான வீச்சளவைக் கொண்டிருந்தது.

**3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

17401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் படி தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 13.6 ஆம் பிரிவிற்கு ஒரு ஆண்டிற்கு ஒரு தடவை மாத்திரம் விழா முற்பணம் வழங்கப்பட வேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டின் போது உத்தியோகத்தர் ஒருவருக்கு ஆண்டின் போது இரு தடவைகள் விழா முற்பணம் வழங்கப்பட்டிருந்தன.

**3.5 உள்ளகக் கணக்காய்வு**

அமைச்சிற்கு உரித்தான உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று காணப்பட்ட போதிலும் போதிய உள்ளகக் கணக்காய்வு 2014 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஒக்டோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2015 மார்ச் 31 ஆம்

திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சு 2015 மே 31 ஆம் திகதி வரையிலும் அவ் அறிக்கையைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டிற்கான மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டிருந்த மிகை, பற்றாக்குறை மற்றும் மேற்கொள்ளப்பட்ட ஏனைய பரிந்துரைகள் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 மனித வள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 11 | 09 | 02 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 02 | - | - |
| (iii) | இரண்டாம் நிலை | 68 | 43 | 25 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 19 | 18 | 01 | - |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 02 | - | 02 |
| | **மொத்தம்** | **100** | **74** | **28** | **02** |

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு மேலதிகமாக ஊடகப் பிரிவிற்காக அமைய உத்தியோத்தர்கள் இருவர் சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 4. தலைப்பு 232 – சிறைச்சாலைகள் திணைக்களம்

## 4.1 ஏடுகளும் பதிவேடுகளும் பேணப்படாமை

திணைக்களத்தால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (ii) | கணனி, உதிரிப் பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | வியாபார முற்பணக் கணக்கு நடவடிக்கைகளுக்கு உரித்தான நிலையான சொத்துப் பதிவேடு | நிதிப் பிரமாணம் இல. 502(2) | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (iv) | சிறைச்சாலை கமநல பதிவேடு, விளைச்சல் பதிவேடு, கால்நடை பதிவேடு, முட்டைகள் பதிவேடு மற்றும் பால் பெறப்பட்டமைக்கான அறிக்கை | சிறைச்சாலைகள் திணைக்களம் கட்டளை இல. 910, 911, 914, 915 மற்றும் 921 | பேணப்பட்டிருக்கவில்லை. |

**4.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்கள்**

மீளாய்வாண்டின் போது திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட 03 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு உரித்தாக 2015 யூன் 30 ஆம் திகதி வரையிலும், பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அவ் ஐயவினாக்களிற்கு உரித்தான கணிப்பிடப்படக் கூடிய கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி ரூபா 3,770 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது.

**4.3 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**ஏனைய அமைச்சு, திணைக்களம் மற்றும் அலுவலகத்தால் வழங்கப்பட்ட ஏற்பாடு**

ஐக்கிய மக்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தகவல் முறைமை ஒன்றை ஸ்தாபிக்கும் செயற்திட்டத்திற்காக சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு ரூபா 19,000,000 தொகையான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த நிதி ஏற்பாடுகளில் ரூபா 8,994,374 செலவிடப்பட்டிருந்தது. எஞ்சிய நிதி ஏற்பாடு புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சின் மூலம் மீளப் பெறப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தைச் செயற்படுத்தும் நடவடிக்கைகள் மந்த நிலையில் காணப்பட்டது.

**4.4 பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 18,584,789 தொகையான 2 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புனரமைப்பு அதிகாரசபையால் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 166,832 தொகையான பணம் குறித்த செயற்பாடு மேற்கொள்ளப்படாது வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) 2013 ஆம் ஆண்டு முதல் மூலதனச் செலவினத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளில் ரூபா 4,188,194 தொகை வழங்குனர்களுக்குச் செலுத்தப்படாது வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) காப்புறுதி நிறுவகம் ஒன்றில் இருந்து கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 10,812 தொகையான காப்புறுதி நட்டஈட்டுத் தொகை வருமானத்திற்கு எடுக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை அரசாங்கப் பொறியியல் கூட்டுத்தாபனத்திற்குப் பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய உசாத்துணைப் பணியகத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 52,740 தொகையான வைப்புகள் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

**4.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

23201 விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம், தற்போது சேவையில் ஈடுபடாத உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 12,003,627 தொகையான கடன் மீதிகளில் ரூபா 2,687,729 தொகையான கடன் மீதி 5 ஆண்டுகளுக்கு மேலான காலமாக நிலவிய போதிலும், அக் கடன் மீதியை அறவிடுவதற்கு திணைக்களத்தால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.6 வியாபார முற்பணக் கணக்குகள்**

மீளாய்வாண்டின் போது திணைக்களத்தால் 23202 ஆம் விடய இலக்க சிறைச்சாலைகள் தொழில்நுட்ப மற்றும் விவசாய நடவடிக்கைகள் தொடர்பான முற்பணச் செயற்பாட்டிற்கு முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அக் கணக்குகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(i) முற்பணக் கணக்குகளில் இருந்து அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 62,273,889 ஆனதுடன் அந் நிலுவை மீதி

அறவிடப்பட்டமைக்கான பின்தொடர் நடவடிக்கை நலிவான நிலையில் காணப்பட்டன.

(ii) வெலிக்கடை சிறைச்சாலையின் தரிப்பிடத்தை கொழும்பு தடுப்புக்காவல் சிறைச்சாலைக்கு ஒப்படைக்கப்பட்ட போதிலும், ரூபா 155,910 தொகையான இருப்பு மீதி வெலிக்கடை சிறைச்சாலைப் புத்தகங்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) 4 சிறைச்சாலைகளின் ரூபா 1,443,935 கூட்டுத்தொகையான விலங்கின இருப்பைப் பதிவழிக்கும் நிதிக்கூற்று தயாரிக்கப்படுகையில் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) குருவிட்ட சிறைச்சாலையின் 2013 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 102,679 தொகையான மூலப்பொருள் இருப்பு அவ் ஆண்டின் இலாபத்திற்கு சீராக்கப்பட்டிருந்தது. எனினும், அச் சீராக்கங்கள் முன்னைய ஆண்டின் போது மேற்கொள்ளப்படாதவையாகக் கருதப்பட்டு மீளாய்வாண்டின் போது இலாபத்திற்குச் சீராக்கப்பட்டிருந்தன.

**4.7 சொத்துக்களின் முகாமைத்துவம்**

திணைக்களச் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் நிலவியமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(i) கண்டி நீதவான் நீதிமன்றத்தின் மூன்று சிறைகளிற்கு வழங்கப்பட்டுள்ள இரு லொறிகளும் ஒரு மோட்டார் வாகனமும் உக்கிய நிலையில் காணப்பட்டன.

(ii) பல்லேகலே திறந்தவெளியரங்கிற்கு 2013 ஆம் ஆண்டின் போது வாகன சேவை நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்த பாரம் தூக்கி இயந்திரமும் தேவையான ஏனைய உதிரிப்பாகங்களுக்காக ரூபா 2,395,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் தேவையான மின் கொள்ளளவு வழங்கப்பட்டிராததன் காரணமாக விளைவற்றுக் காணப்பட்டது.

(iii) திணைக்கள உத்தியோகத்தர்களுக்குத் தேவையான பாதணிகளைத் தயாரிப்பதற்காக ரூபா 3,575,000 தொகை செலவில் 2 இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2010 ஆம் ஆண்டு முதல் உத்தியோகத்தர்கள் பயிற்றுவித்தல், பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மற்றும் நிர்மாணிப்பிற்காக ரூபா 1,796,964 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அவ் இயந்திரங்களின் மூலம் உற்பத்தி நடவடிக்கைகள் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஆம் ஆண்டிற்கு உரித்தான மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த மிகை, பற்றாக்குறை மற்றும் மேற்கொள்ளப்பட்ட ஏனைய பரிந்துரைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 1984 நவம்பர் 31 ஆம் திகதி டொலர் பாம் மற்றும் கென்ட் பாம் பண்ணைகளுக்கு பயங்கரவாதத் தாக்குதல் காரணமாகச் சேதமுற்ற 61 விடயங்கள் அளவில் புத்தகத்தில் இருந்து அகற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) பொறுப்பேற்கப்படாத சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படல்**

முறையாக பொறுப்பேற்கப்பட்டிராத காணிகளில் திணைக்களத்தால் சிறைச்சாலைகள் நிறுவகம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| | சிறைச்சாலைகள் | காணி உரித்து | அளவு |
|---|---|---|---|
| (i) | சிலாபம் சிறைச்சாலை | பொலிஸ் திணைக்களம் | 12 பேர்ச் |
| (ii) | புஸ்ஸ சிறைச்சாலை | பிரதேச செயலாளர் | 2.778 ஹெக்டேயர் |
| (iii) | வட்டரெக்க திறந்த வெளி முகாம் | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு | 33 ஏக்கர் 01 ரூட் 38 பேர்ச் |

(ஈ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்

திணைக்களத்தால் பல வருட காலமாக மஹர சிறைச்சாலையில் உள்ள 3 உத்தியோகபூர்வ வாகனங்கள் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. அவ் வீடுகளைப் பயன்படுத்திய உத்தியோகத்தரிடம் அந்த வீட்டு நீர்க் கட்டணம், மின்சாரக் கட்டணம் மற்றும் பொருளாதார வாடகை போன்றன அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 4.8 தீர்க்கப்படாத பொறுப்புகள்

திணைக்களத்தால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்க்கப்படாத பொறுப்புகள் ரூபா 283,556,599 ஆகக் காணப்பட்டதுடன் இது தொடர்பான காலப்பகுப்பாய்வு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.9 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | |
| (அ) | நிதிப் பிரமாணம் 104 | 591,640 | திணைக்களத்தின் வாகனம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது மீளாய்வாண்டின் போது விபத்திற்கு உட்பட்ட 8 வாகனங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 109(I) | | சிறைச்சாலைகளில் விலங்கினங்கள் மரணிக்கையில், இலவசமாகப் பகிர்ந்தளித்தல் போன்ற நடவடிக்கைகளில் புத்தகங்களில் இருந்து அகற்றும் கட்டளை பெறப்பட்டிராததுடன் அவ் அகற்றல் கட்டளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | நிதிப் பிரமாணம் 396(ஈ) | 261,981 | களுத்துறை சிறைச்சாலையில் இருந்து விநியோகிக்கப்பட்ட எனினும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராத 6 மாதங்களிற்கு மேல் காலம் கடந்த காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) | நிதிப் பிரமாணம் 446(2) | 5,872,182 | கொழும்பு தடுப்புக் காவல் சிறைச்சாலையில் 2012 ஆம் ஆண்டு முதல் நிலவிவரும் இனங்காணப்படாத பெறுவனவு களும் கொடுப்பனவுகளும் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 4.10 உள்நாட்டு நிதியீட்டலின் மூலம் செயற்திட்டத்தைச் செயற்படுத்தல்

### செயற்திட்டத்தைப பூர்த்திசெய்யாது கைவிடல்

தும்பறை சிறைச்சாலையில் தூண்களுடனான நீர்த்தாங்கி நிர்மாணித்தலிற்காக ரூபா 36.9 மில்லியன் தொகையான மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அம் மதிப்பீட்டின் படி, நிர்மாணிப்புகள் 6 மாதங்களில் பூர்த்திசெய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 20 சதவீதம் அதாவது ரூபா 11.8 மில்லியன் தொகை வேலை ஆரம்பிப்பு முற்பணம் 2012 சனவரி மாதம் செலுத்தப்பட்டிருந்தது. நிர்மாணிப்புகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்ட காணியின் மண்ணிற்குக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. தயாரிக்கப்பட்டு 6 மாதங்களில் பூர்த்தி செய்யப்படுவதற்கு 20 சதவீதமான ரூபா 11.8 மில்லியன் தொகையான முற்பணம் 2012 சனவரி மாதம் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், அவ் இடத்தில் மண் குறைபாடு காரணமாக செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

## 4.11 வங்கி கணக்கு பேணப்படுவதிலான குறைபாடுகள்

### (அ) செயற்பாடற்ற வங்கிக் கணக்குகள்

சிறைச்சாலைக் கைதிகளின் சம்பளத்தில் 10 சதவீதப்படி பெற்றுக்கொள்ளப்பட்டு சிறைச்சாலைகள் வெகுமதி நிதியம் எனும் பெயரில் ஓர் நிதியம் உருவாக்கப்பட்டிருந்தது. அந் நிதியத்திற்காகக் கிடைக்கும் பணம் அரசாங்க வங்கி ஒன்றின் வங்கிக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. அவ் வங்கிக் கணக்கின் மாதாந்தக் கணக்கு விபரம் பெறப்பட்டு இணக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அக் கணக்கில் 2014 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 4,402,503 தொகையான மீதி ஒன்று காணப்பட்டது.

### (ஆ) சீராக்கப்பட வேண்டிய மீதி

சிறைச்சாலைகள் திணைக்களத்தால் 2014 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த சீராக்கங்கள் தொடர்பான விபரத்தின் படி கண்டறியப்பட்ட தகவல்கள் பின்வருமாறாகும்.

| | சீராக்கங்கள் தொடர்பான விபரம் | காலப்பகுப்பாய்வு | | கூட்டுத்தொகை |
|---|---|---|---|---|
| | | 06 மாதங்களுக்கு மேல் 01 வருடத்திற்குக் குறைவானவை | 01 வருடத்திற்கு மேற்பட்ட 03 வருடங்களிற்குக் குறைவானவை | |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வழங்கப்பட்டு எனினும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | - | 261,981 | 261,981 |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | இனங்காணப்படாத வரவுகள் | 6,668,129 | 5,786,223 | 12,454,352 |
| (iii) | இனங்காணப்படாத செலவுகள் | 1,253,826 | 5,827,172 | 7,080,998 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கொழும்பு தடுப்புக்காவல் சிறைச்சாலையில் 2012 சனவரி முதல் உள்ள 29 காசோலைகளின் கூட்டுத்தொகையில் ரூபா 5,786,223 தொகையான இனங்காணப்படாத பெறுவனவுகளும் 52 காசோலைகளின் கூட்டுத்தொகை அடங்கிய ரூபா 5,786,223 தொகையான இனங்காணப்படாத கொடுப்பனவுகள் நிலவியது. திணைக்களத்தின் நாளாந்த காசேட்டைச் சமப்படுத்தலும் கண்காணிப்பும் நலிவான காரணத்தால் இம் மீதி தீர்க்கப்படாது நிலவிவந்தது.

**4.12 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

திணைக்களத்தால் ஏற்படுத்தப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றவையாகக் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அத்தகைய சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

(அ) குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாட்டின் மூலம் ரூபா 50,000,000 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் கொள்வனவிற்குத் தேவையான அடிப்படைச் செயற்பாடேனும் ஆரம்பிக்கப்பட்டிராமையால் திணைக்களத்திற்குத் தேவையான 5 நீர் தாங்கிகளும் 10 லொறிகளும் கொள்வனவு செய்யப்படுவதற்கு முடியாதிருந்தன.

(ஆ) திணைக்களத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வரும் அதிகாரப் பொறுப்பு இல்லாத கொடுக்கல்வாங்கல்கள் கண்டறியப்பட்டன.

(i) தும்பற சிறைச்சாலையின் சமையலறை நிர்மாணிக்கும் ஆரம்ப மதிப்பீடு ரூபா 22.6 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. நிர்மாணிப்பு வேலைகள் தாமதமானமையால் மூல மதிப்பீட்டுத் தொகை மாறுபட்டமை மற்றும் ஆவியாக்கல் வெப்பமூட்டி பொருத்தப்படுவதற்கு கட்டிடத்தை மாற்றியமைத்ததன் காரணமாக அச் செயற்பாட்டிற்காக ரூபா 56.9 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், இதற்குத் தேவையான முறையான அங்கீகாரம் ஒன்று பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) தும்பற சிறைச்சாலையின் மலசலக் கழிவகற்றல் முறையைத் தயாரிப்பதற்கு தனியார் கம்பனி ஒன்றிற்கு ஒப்பந்தம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முறைமையின் நிர்மாணிப்பு களுக்கான விலைக்கோரல்கள் ரூபா 38 மில்லியன் தொகையாகவும், அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் சேவைக் கட்டணம் ரூபா 2,960,000 தொகையாகவும் காணியைத் தயார் செய்யும் செலவினமான ரூபா 1,000,000 தொகை உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அம் மதிப்பீட்டுத் தொகைகள் ஏற்பட்ட விதம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) தும்பர சிறைச்சாலையில் நிர்மாணிப்பு துணை விடயங்களாக குறிப்பிடப்பட்டிருந்த பாதுகாப்பு சுவர்களும் மகளிர் பிரிவு, நிர்வாகக் கட்டிடம், சமையலறை, நீர்த் தாங்கி மற்றும் பம்பி அறைக்காக ஆரம்ப ஒப்பந்தப் பெறுமதி ரூபா 75,746,881 ஆன போதிலும், பின்னர் ஒப்பந்தக்காரர் சமர்ப்பித்த விலை ரூபா 96,384,618 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 20,637,737 தொகையான விலைத்தளம்பல் அவதானிக்கப்பட்டது. மேற்குறித்த விடயங்களின் விலைகள் அதிகரித்தமை தொடர்பிலான கொடுப்பனவுகள் முறையான அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iv) அடிப்படை மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிராத தும்பற சிறைச்சாலையின் மேலதிக 5 வேலைப் பிரிவுகளிற்காக ரூபா 157,978,484 தொகை ஏற்கப்பட்டிருந்த போதிலும் அவ் வேலைப் பிரிவுகளுக்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(v) அங்குணுகொல பெலஸ்ஸ சிறைச்சாலை நிர்மாணிப்புச் செயற்திட்டத்தின் மொத்தக் கிரய மதிப்பீடு ரூபா 3,214.1 மில்லியனிற்காக தேசிய கொள்வனவு திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. விலை மனுக்கள் கோரப்படுகையில் மொத்த ஒப்பந்தத்திற்காக ரூபா 3,575.9 மில்லியன் தொகையான விலைகளைச் சமர்ப்பித்திருந்த ஒப்பந்தக்காரர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். ரூபா 133.4 மில்லியன் தொகை ஏற்பாடாக அவ் ஒப்பந்தத் தொகைக்குச் சேர்க்கப்பட்டிருந்தது.

**4.13 நிதிச் செயற்திறனின்மை வடிவிலான கொடுக்கல்வாங்கல்கள்**

அங்குணுகொல பலஸ்ஸ சிறைச்சாலை நிர்மாணிப்புச் செயற்திட்டத்தின் ஒப்பந்தம் மூன்று கட்டங்களில் பூர்த்தி செய்யப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததுடன் முதலாவது வேலை ஆரம்பிப்பு முற்பணம் முறையாகப் பயன்படுத்தப்பட்டதை அடுத்து இரண்டாம் முற்பணம் வழங்கப்பட வேண்டும் என உடன்படிக்கையின் 14(2) ஆம் பிரிவில் காண்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாகக் கருத்திற்கொள்ளப்படாது மூன்றாம் கட்டத்திற்கு உரித்தான மொத்த ஒப்பந்தத் தொகையான ரூபா 3,709 மில்லியன் தொகைக்காக 20 சதவீத வேலை ஆரம்ப முற்பணமாக ரூபா 801 மில்லியன் தொகை 2014 மே 05 ஆம் திகதி ஒப்பந்த கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரர் பெறுமதி சேர் வரி (VAT) பதிவு இல. உள்ளடக்கப்பட்ட சிட்டையைச் சமர்ப்பித்திராததுடன் ரூபா 85 மில்லியன் தொகையான பெறுமதி சேர் வரியும் செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கைக்கு மாறாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 400.5 மில்லியன் தொகையான முற்பணத் தொகைக்காக ஒப்பந்தக் கம்பனியில் இருந்து மீள ரூபா 9.4 மில்லியன் தொகையான வட்டித் தொகை அறவிடப்படுவதற்கு அடிப்படை உடன்படிக்கைக்கு மாறாகச் செயற்படுவது அவதானிக்கப்பட்டது.

**4.14 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

போகம்பறை சிறைச்சாலையை உடனடியாக இடம் மாற்றுகையில் எடுக்கப்பட்ட கைத்தொழில் பிரிவில் காணப்பட்ட பெறுமதியான இயந்திரங்களைத் தற்காலிகமாகக் களஞ்சியப்படுத்தப்படுவதற்கு ஓர் கூடாரத்தை அமைப்பதற்கு ரூபா 4,283,455 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**4.15 முகாமைத்துவ நலிவுகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) தும்பறை சிறைச்சாலை நிர்மாணிப்பை முகாமைத்துவம் செய்வதற்கு செயற்திட்ட முகாமைத்துக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாகவும் முறையான முகாமைத்துவம் இன்மையாலும் கதவை மாற்றியமைப்பதுடன் மேலதிக வேலையாக ஒப்பந்தப் பெறுமதி ரூபா 33,909,846 தொகையானதுடன் இதற்காக ரூபா 29,434,300 தொகை செலவிடப்பட்டிருந்தது. உடனடியாக இடமாற்றச் செயற்பாட்டிற்காக கழிவு நீர் மற்றும் மலசலக் கழிவுகளை அகற்றுவதற்கு ரூபா 17,275,000 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் தற்காலிகத் தாங்கி நிர்மாணிக்கப்படுவதற்கு ரூபா 8,883,853 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) அங்குணுகொலபலஸ்ஸ சிறைச்சாலை நிர்மாணிப்புச் செயற்திட்டத்திற்காக ரூபா 3,214 மில்லியன் தொகையான செயற்திட்டத்திற்காக ஓர் முகாமைத்துவக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிராததுடன் நீர் வசதிகள் மற்றும் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளல், மலசலக் கழிவுகளை அகற்றும் முறைமைகள் திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

**4.16 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 95 | 52 | 43 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 6,642 | 5,011 | 1,631 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 509 | 294 | 215 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 364 | 333 | 31 | - |
| (v) | அமைய அடிப்படை) | - | 04 | - | 04 |
| | மொத்தம் | **7,610** | **5,694** | **1,920** | **04** |

அமைய அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த 04 ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. தலைப்பு 326 – சமூக அடிப்படையிலான சீர்திருத்தத் திணைக்களம்

### 5.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

திணைக்களத்தால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (i) | பிணை பதிவேடு | நிதிப் பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ii) | இழப்புகள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | பேணப்பட்டிருக்கவில்லை |
| (iii) | பொறுப்புகள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை |
| (iv) | வாகன பட்டியல் பதிவேடு | நிதிப் பிரமாணம் 1647 (உ) | பேணப்பட்டிருக்கவில்லை |
| (v) | விலைமனுக் கோரல் பதிவேடு | அரசாங்கக் கொள்வனவு நடைமுறை வழிகாட்டி 5.2.1 | பேணப்பட்டிருக்கவில்லை |
| (vi) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை |

### 5.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்கள்**

03 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்புகள் அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டின் 27 சதவீதத்தித்திலிருந்து 97 சதவீதம் வரையான வீச்சளவைக் கொண்டிருந்தது.

**5.3 கட்டுநிதிக் கணக்குகள்**

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப் பிரமாணம் 371 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு மாறாக நிறைவேற்றுத்தரமல்லாத 22 உத்தியோகத்தர்களுக்காக 46 சந்தர்ப்பங்களின் போது ரூபா 614,570 தொகையான குறித்த பணிக்கான துணைக் கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதிப் பிரமாணம் 371 இன் பிரகாரம் குறித்த செயற்பாடு முடிவுற்றதை உடனடுத்து பெறப்பட்ட குறித்த பணிக்கான துணைக் கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 67 சந்தர்ப்பங்களிற்காக வழங்கப்பட்ட ரூபா 698,407 கூட்டுத்தொகையான குறித்த பணிக்கான துணைக் கட்டுநிதி செயற்பாடு முடிவுற்று 01 மாதம் முதல் 9 மாதங்கள் வரையான கால வீச்சிலான தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது.

(இ) நிதிப் பிரமாணம் 371(5) இன் பிரகாரம் குறித்த பணிக்கான துணைக் கட்டுநிதி ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும், 3 சந்தர்ப்பங்களின் போது பெறப்பட்டிருந்த ரூபா 14,150 கூட்டுத்தொகையான குறித்த பணிக்கான துணைக் கட்டுநிதி 2015 யூன் 30 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதிப் பிரமாணம் 371 இன் பிரகாரம் ஒரு நிறைவேற்று உத்தியோகத்தருக்கு ஒரு தடவை வழங்கப்படக்கூடிய ஆகக் கூடுதலான துணைக்கட்டுநிதி ரூபா 20,000 ஆன போதிலும், இப் பிரமாணங்களிற்கு முரணாக 04 சந்தர்ப்பங்களின் போது ஒரே செயற்பாட்டிற்காக நிறைவேற்றுத் தரமற்ற சில நபர்களுக்கிடையே ரூபா 225,000 தொகையான குறித்த பணிக்கான துணைக்கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

**5.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

-----------------------------------------

32601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளிற்கான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம், அன்றைய தினதித்தில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 691,692 தொகையானதுடன் அந் நிலுவை மீதி 1 வருடத்திலிருந்து 05 வருடங்கள் வரையான காலப்பகுதியிலிருந்து நிலவிவந்த போதிலும் அந் நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) 04 வருடங்களுக்கு அண்மித்த காலமாக வேலை இடைநிறுத்தத்திற்கு உள்ளாக்கப்பட்ட இரு உத்தியோகத்தர்களின் ரூபா 249,166 கூட்டுத்தொகையான கடன் மீதியை அறவிட்டுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**வருடாந்த செயலாற்றல் திட்டம்**

2014 திசெம்பர் 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த செயலாற்றல் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள செயலாற்றல் திட்டம் குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படல்**

2014 ஒக்டோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2015 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தால் அவ் அறிக்கை 2015 யூன் 30 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 ஆம் ஆண்டிற்காகவே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**5.7 தீர்க்கப்படாத பொறுப்புகள்**

திணைக்களத்தால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1 வருடத்திற்குக் குறைவான காலம் முதல் நிலவிவரும் தீர்க்கப்படாத பொறுப்புகளின் மீதி ரூபா 477,771 ஆகக் காணப்பட்டது.

**5.8 செயலாற்றல்**

**போதுமான அளவில் மேற்கொள்ளப்பட்டிராத முக்கிய செயற்பாடுகள்**

திணைக்களத்தால் முக்கிய செயற்பாடுகள் போதுமான அளவில் மேற்கொள்ளப்பட்டிராததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

(அ) ''சமூக திருத்தக் கட்டளைகளின் அளவுகளை அதிகரித்துக்கொள்ளல்'' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நீதவான்களையும் சட்டத்தரணிகளையும் அறிவூட்டுவதற்காக 20 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது இதில் 12 மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) ''சமூக திருத்தக் கட்டளைகளின் அளவுகளை அதிகரித்துக்கொள்ளல்'' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிரதேச அலுவலகங்களைக் கண்காணிப்பதற்காக 97 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 61 அலுவலகங்கள் மாத்திரமே கண்காணிக்கப்பட்டிருந்தன.

(இ) ''சமூக திருத்த பங்காளர்களுக்காக நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தல்'' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கல்விசார்ந்த 400 அபிவிருத்திச்

செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இதில் 274 செயற்திட்டங்கள் மாத்திரமே செயற்படுத்தப்பட்டிருந்தன.

(ஈ) ‘‘சமூக திருத்த பங்காளர்களின் உழைப்பு நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தல்’’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விசேட செயற்திட்டத்தின் ஊடாக உழைப்பு நாட்டின் பொருளாதாரத்திற்குப் பங்களிப்புச் செய்து கொள்வதற்காக 90 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 55 செயற்திட்டங்கள் மாத்திரமே செயற்படுத்தப்பட்டிருந்தன.

(உ) ‘‘சமூக திருத்த பங்காளர்களின் உழைப்பு நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தல்’’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 750 சிரமதான நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 669 செயற்திட்டங்கள் மாத்திரமே செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 5.9 வங்கிக் கணக்குகள் பேணலிலான குறைபாடுகள்

### (அ) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிப்பதில் நீண்ட தாமதம்

ஒரு வங்கிக் கணக்கிற்கு உரித்தான 2014 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று 2015 மார்ச் 15 ஆம் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) இணக்கம் செய்யப்பட வேண்டிய மீதி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) விநியோகிக்கப்பட்டு எனினும், வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிராத ரூபா 4,627 கூட்டுத்தொகைப் பெறுமதியான காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வங்கியால் நடைமுறைக் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 441,812 கூட்டுத்தொகை தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பரீட்சித்து அரசாங்க வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் திணைக்களத்தால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.10 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 04 | 03 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 114 | 101 | 13 |
| (iii) | இரண்டாம் நிலை | 454 | 347 | 107 |
| (iv) | ஆரம்ப நிலை | 11 | 10 | 01 |
| | மொத்தம் | **583** | **461** | **122** |